செய்தி வெளியீடு எண் :1685 நாள் : 18.08.2023

## செய்தி வெளியீடு

**மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ரூ.88.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 14,000 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (18.8.2023) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 14,000 பயனாளிகளுக்கு 88 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மீன் வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கீழக்கரை, திருவாடனை, ஆர்.எஸ். மங்கலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மானியத்தில் சூரை மீன்படகு கட்டுதல் மற்றும் பிரதமரின் மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டங்கள், கிசான் கடன் அட்டைகள், கடற்பாசி வளர்ப்பு, மீனவர் நலவாரிய அட்டைகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் புதிய தொழில்முனைவோர் தொழில் மேம்பாட்டு திட்டத்தில் நிதியுதவி, கூட்டுறவுத் துறை சார்பில் பயனாளிகளுக்கு மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி, கே.சி.சி. கடற்பாசி

வளர்ப்புக் கடனுதவி, மகளிர் திட்டத்தின் சார்பில் கூட்டு பொறுப்பு குழு கடனுதவி, மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி என மொத்தம் 14,000 பயனாளிகளுக்கு மொத்தம் 88 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த விழாவில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, திரு.கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. செ. முருகேசன், திரு. இராம. கருமாணிக்கம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு.ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in